## ஏழைகளின் சம்பளப் பணத்தை விடுவிக்க பணமில்லையா? அல்லது மனமில்லையா?

# ஆர்ப்பாட்டக் குரல் டெல்லியை அசைக்கட்டும்!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அறைகூவல்!

**சென்னை, மார்ச் 31 -**

**“100 நாள் வேலைத் திட்டத்தை ஒழித்துக் கட்ட முயற்சிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து தமிழ்நாடெங்கும் நடைபெறும் ஆர்ப்பாட்டத்தின் குரல் டெல்லியை அசைக்கட்டும்” என்று முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கூறியுள்ளார்.**

இதுகுறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-



**காந்தியைப் பிடிக்காதவர்களுக்கு அவர் பெயரிலான நூறு நாள் வேலைத் திட்டத்தையும் பிடிக்கவில்லை.**

**இந்தியக் கிராமப்புறப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக, இரத்த ஓட்டமாக UPA அரசால் வளர்த்தெடுக்கப்பட்ட MGNREGA மீது சம்மட்டி கொண்டு அடித்து ஒரேயடியாக ஒழித்துக்கட்டும் வேலையில் இறங்கியிருக்கிறது இரக்கமற்ற பா.ஜ.க. அரசு!**

**உங்களுக்கு ‘வேண்டப்பட்ட’ கார்ப்பரேட்டுகள் என்றால் பல லட்சம் கோடி ரூபாய்க் கடனைக் கூட ஒரே கையெழுத்தில் தள்ளுபடி செய்கிறீர்களே? வேகாத வெயிலில் உடலை வருத்தி, வியர்வை சிந்தி உழைத்த ஏழைகளின் சம்பளப் பணத்தை விடுவிக்க மட்டும் ஏன் பணமில்லை? பணமில்லையா அல்லது மனமில்லையா?**

**தமிழ்நாடெங்கும் இன்றைய ஆர்ப்பாட்டத்தில் கழக உடன்பிறப்புகளும், ஏழை மக்களும் எழுப்பும் குரல் டெல்லியை எட்டட்டும்! SadistBJP அரசின் மனம் இரங்கட்டும்!**

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

---

குதிரையாற்றின் குறுக்கே ரூ.3.25 கோடியில் தரைப்பாலம் அமைக்கப்படும்!

## பச்சையாறு அணை கட்டுவதில் கழக அரசின் தொடர் முயற்சி!

### சட்டப் பேரவையில் - அமைச்சர் துரைமுருகன் விளக்கம்!

**சென்னை, மார்ச். 31-**

**சட்டப் பேரவையில் பழனி தொகுதி கழக சட்டமன்ற உறுப்பினர் ஐ.பி.செந்தில்குமார் எழுப்பிய வினாக்களுக்குப் பதிலளித்த நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள், பச்சையாறு அணை கட்டுவதில் கழக அரசு நீண்ட காலமாக மேற்கொண்டு வரும் முயற்சிகள் குறித்து விரிவான விளக்கமளித்தார்.**



கேள்வி நேரத்தில் இதுகுறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**ஐ.பி.செந்தில் குமார்:** பழனி தொகுதி, பழனி ஊராட்சி ஒன்றிம், ஆண்டிபட்டி ஊராட்சி, LS 300வது மீட்டரில் குதிரையாற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**அமைச்சர் துரைமுருகன்:** திண்டுக்கல் மாவட்டம், பழனி ஊராட்சி ஒன்றிம், ஆண்டிப்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள குதிரையாறு அணை ஆற்றில் LS300வது மீட்டரில் தரைப்பாலம் அமைக்கும் பணி ரூ.3.25 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும் என்று இந்தாண்டு மானியக் கோரிக்கையில் அறிவித்திருக்கிறேன். அதற்கு விரைவில் ஒப்புதல் அளித்து பணி துவங்கப்படும்.

**ஐ.பி. செந்தில் குமார்:** இந்தாண்டு நீர்வளத் துறையினுடைய மானியக் கோரிக்கையில் 8வது அறிவிப்பில், கிட்டத்தட்ட 3 கோடி 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அந்தப் பாலம் அமைக்கப்படுமென்று அறிவித்திருக்கிற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மதிப்பிற்குரிய நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது தொகுதி மக்களின் சார்பில் முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, பழனி வட்டத்தில் அமைந்துள்ள வரட்டாற்றின் குறுக்கே அமைந்துள்ள உப்புசட்டி அணைக்கட்டு என்பது பழமையான ஓர் அணைக்கட்டு. அந்த அணைக்கட்டு இப்போது சிதலமடைந்திருக்கிறது. அதையும் புனரமைத்துத் தர அமைச்சர் அவர்களை வேண்டுகிறேன். பழனி வட்டம், பாலசமுத்திரம் கிராமம், குறும்பப்பட்டி அருகில் பாலாற்றின் குறுக்கே தரைப் பாலம் அமைத்து, விவசாயிகளுடைய வாழ்வுகளை காத்திட வேண்டும்.

**அமைச்சர் துரைமுருகன்:** ஒன்று வாங்கினால் இன்னொன்று இலவசம் என்று வியாபாரத்தில் சிலர் சொல்வார்கள். அதுபோல, இப்போதுதான் ஒரு திட்டத்தைக் கொடுத்திருக்கிறேன். அதற்கு நன்றி சொல்லிவிட்டு, அடுத்த திட்டத்தைப்பற்றி கேட்கிறார். அதுவும் நிதிநிலைக்கேற்ப செய்து தரப்படும்.

**ஐ.பி.செந்தில்குமார்:** 1985 லிருந்து 2024 வரை கிட்டத்தட்ட 39 ஆண்டுகளாக 1,800க்கும் மேற்பட்ட ஏக்கர் நிலங்கள் பயன்பெறக்கூடிய காவலப்பட்டி பகுதியில் பச்சையாறு அணை அமைக்கப்பட வேண்டுமென்று நானும் ஒன்பதாண்டுக் காலமாக இந்த அவையிலே தொடர்ந்து கேட்டுக்கொண்டிருக்கிறேன்.

அந்த அணை கட்டுவது குறித்த ஆய்வுகள் பலமுறை நடத்தப்பட்டு, தொழில்நுட்பக் காரணங்களால் அதை எடுத்துச் செய்வதில் சிரமங்கள் இருப்பதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. எல்லார்க்கும் எல்லாம் என்கிற சமூகப் பொருளாதாரம் மற்றும் ஒருங்கிணைந்த அனைவருக்குமான வளர்ச்சி என்கிற நிலைப்பாட்டில் மிக உறுதியாக பயணிக்கிற நம்முடைய திராவிட மாடல், மக்கள் தலைவர் அரசு பொருளாதார பயனீட்டு அளவுகளை விளக்கி, சமூக அம்சங்களோடு, social aspect என்ற உணர்வோடு, குறிப்பாக, பழனியில் இருக்கக்கூடிய வரதமா நதி அணை, பாலாறு பொருந்தலாறு அணை, குதிரையாறு அணை ஆகிய இவையனைத்தும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால், நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்தபோது உருவாக்கப்பட்டு, விவசாயிகளினுடைய வாழ்வைப் பாதுகாத்ததை அந்தப் பகுதி மக்கள் என்றும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

எனவே, அந்த வரலாற்றின் வரிசையில், இந்த அணையும் இடம்பெற வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். மேட்டுப் பகுதி மக்கள் வறட்சியான நிலங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எனவே, இந்த பச்சையாறு அணை திட்டத்தை கனிவோடு பரிசீலித்து, அப்பகுதி மக்களினுடைய வாழ்வாதாரத்தைக் காத்திட நீங்கள் வழங்கிட வேண்டும்.

**அமைச்சர் துரைமுருகன்:** பச்சையாறு அணை கட்ட வேண்டுமென்பதில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு எவ்வளவு அக்கறை இருக்கிறதோ, எனக்கும் அதிலே உண்டு. காரணம், நான் முதன்முதலாக பொதுப் பணித் துறை அமைச்சரானவுடன், நேரடியாகச் சென்று பார்த்தது அந்த பச்சையாறு அணையைக் கட்ட வேண்டுமென்பதற்காகத்தான். ஆனால், 1985ல் ஆய்வு செய்யப்பட்டு, சாத்தியக்கூறுகள் இல்லையென கைவிட்டு விட்டார்கள். மீண்டும், 1999ல் 30 கோடி ரூபாய் ஆகும் என்று மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, ஆய்வு செய்ததில், அணை கட்டப்படுகிற இடத்தில் கடினமான பாறைகள் இல்லையென்று அந்தத் திட்டத்தைக் கைவிட்டு விட்டா ர்கள். 1920ல் 110 கோடி ரூபாய் ஆகும் என்று மீண்டும் ஆய்வு செய்ய சொன்னோம். அந்தத் திட்டத்தைக் கொடுத்தார்கள்.

பச்சையாறு நீர்த்தேக்கம் அமைக்க உத்தேசிக்கப்பட்ட இடத்தில் 600 மீட்டர் மேல்புறத்தில் ஏற்கெனவே வனத் துறையால்ஆக, 3, 4 முறை ஆய்வு செய்து, சரியாக வரவில்லை என்று விட்டு விட்டார்கள். பிறகு என்ன செய்வது என்று பார்த்தோம். இந்தத் திட்டத்திற்குமேல் 600 மீட்டர் உயரத்தில் வனத் துறை check dam ஒன்று கட்டியிருக்கிறது. அதிலிருந்துதான் நீரை எடுக்க வேண்டியிருக்கிறது. ஆகையினால், மீண்டும், நான் அந்தத் திட்டத்திற்கு இந்த ஆண்டு ஆய்வு செய்ய சொல்கிறேன். பச்சையாறு அணை கட்டுவதில் எனக்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லை.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

---

பிரதம மந்திரி நகர்ப்புற வீட்டுவசதி திட்டத்தில்,

## தமிழ்நாட்டுக்கு உரிய பங்கீடு அளிக்கப்படுகிறதா?

### மக்களவையில் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி!

புதுடெல்லி, மார்ச் 31-

திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரக்கோணம், நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் 27 மார்ச் 2025 அன்று மக்களவையில், ஒன்றிய அரசின் நிதியில் செயல்படுத்தப்படும் பிரதம மந்திரி நகர்ப்புற வசதி திட்டத்தில், தமிழக அரசிற்கு உரிய பங்கு அளிக்கப்படுகிறதா? என்றும், வீடுகள் காலியாக உள்ளதை அரசின் கவனத்தில் உள்ளதா? என்றும், தனியார் அரசு பங்களிப்பு முறையில் பசுமை வீடுகள் திட்டத்தை செயல்படுத்தும் எண்ணம் அரசிடம் உள்ளதா என்றும் ஒன்றிய அரசின் வீட்டுவசதித் துறை இணையமைச்சர் டோகன் சாகுவிடம் விரிவான கேள்வியை எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய அரசின் வீட்டுவசதித் துறை இணையமைச்சர் அவர்கள் அளித்த பதில் வருமாறு:-

தமிழ் நாட்டில் பணி புரிந்து வரும் வெளி மாநில தொழிலாளர்களுக்கும், ஏழை மக்களுக்கும் பயன் பெறத் தக்க வகையிலும், பணிபுரியும் இடத்திற்கு அருகிலேயே வீட்டுவசதி பணியாளர்களுக்கு கிடைக்கும் வகையிலும், ஒன்றிய அரசின் பிரதம மந்திரி நகர்ப்புற வீட்டுவசதி திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்றும் அவர்களால் நேரு நகர்ப்புற புத்தாக்க திட்டத்தின் கீழ் தனியார் அரசு பங்களிப்புடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்றும், இதுவரை 5648 வீடுகள்கட்டித்தரப்பட்டுள்ளன என்றும், வீடுகள் காலியாக இல்லை என்றும், நகர்ப்புற வளர்ச்சித் துறையினரால் ஏழு மாநிலங்களில் 82000க்கும் மேற்பட்ட வீடுகள் நகர்ப்புறங்களில் கட்டப்பட்டுள்ளன என்றும், இவற்றில் 35000க்கும் மேற்பட்ட வீடுகள் தமிழ்நாட்டிற்காக கட்டப்பட்டுள்ளன என்றும் ஒன்றிய அரசின் வீட்டுவசதித் துறை இணையமைச்சர் தெரிவித்தார்.



ஒன்றிய அரசின் அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டம் கடந்த செப்டம்பர் 2024 முதல் புதுப் பொலிவுடன் செயல்படுத்தப் பட உள்ளது என்றும் இத்திட்டத்தின் கீழ் நான்கு வெவ்வேறு பிரிவு களின் படி ஒரு கோடி ஏழை மக்களுக்கு பயன் கிடைக்கும் என்றும், பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கும். குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கும். வெளிமாநிலத்தில் இருந்து பணிபுரியும் பணியாளர்களுக்கும், இத்திட்டத்தின் மூலம், பசுமை வீடுகள், தனியார் அரசு பங்களிப்புடன் செயல்படுத்த ஒன்றிய அரசு திட்ட மிட்டுள்ளது என்று ஒன்றிய அரசின் வீட்டுவசதித் துறை இணையமைச்சர் டோகன் சாகு, மக்களவையில் அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதிலை அளித்துள்ளார்.

---



புதுக்கோட்டை வடக்கு தெற்கு மாவட்ட பொறியாளர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே. செல்லப்பாண்டியன் தலைமையில் மாநில பொறியாளர் அணி துணை செயலாளரும் திருச்சி மண்டல பொறுப்பாளருமான இரா.ப.பரமேசு குமார் முன்னிலையில் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் எஸ்.வி.ஆர். ஸ்டாலின் ராஜா வரவேற்புரையில் புதுக்கோட்டை வடக்கு மாவட்டத் தலைவர் முத்துக்குமார் நன்றியுரையில் புதுக்கோட்டை மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.ஆர்.ராமசாமி, சின்னையா, மு.தென்னரசு, சத்தியமூர்த்தி, முத்துக்குமார், செல்லப்பன் மற்றும் புதுக்கோட்டை வடக்கு தெற்கு மாவட்ட அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.



கோவை போத்தனூர் சாலை பி.வி.ஜி. திருமண மகாலில், ஒருங்கிணைந்த கோவை மாவட்ட தி.மு.க. சார்பில் நடைபெற்ற இப்தார் புனித ரமலான் நோன்பு திறக்கும் நிகழ்ச்சியில் தமிழ்நாடு மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் – மாவட்ட பொறுப்பு அமைச்சர் வி.செந்தில்பாலாஜி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். மாவட்டக் கழகச் செயலாளர்கள் நா.கார்த்திக், தொண்டாமுத்தூர் ரவி, தளபதி முருகேசன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் கோவை மாவட்ட அனைத்து ஜமாத்துகள், இஸ்லாமிய இயக்கங்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் கூட்டமைப்பு, நிர்வாகிகள், தோழமைக் கட்சி நிர்வாகிகள், பொதுமக்கள் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



நாகை மாவட்டம், நாகை நகரம், பழந்தெருவில் கமாலியா முஸ்லிம் லீக் ஜமாத்தார்கள் மற்றும் நாகை நகர தி.மு.க. இணைந்து நலத்திட்ட உதவிகள் மற்றும் இஃப்தார் புனித ரமலான் நோன்பு திறப்பு நிகழ்ச்சியில் பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி கலந்து கொண்டார். உடன்நாகை மாவட்டக் கழகச் செயலாளர் – தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் என்.கௌதமன், மாவட்ட ஆட்சித் தலைவர் ப.ஆகாஷ், நாகை நகரக் கழகச் செயலாளரும், நகரமன்ற தலைவரும் இரா.மாரிமுத்து, மாநில விவசாய அணி இணை செயலாளர் ஆர்.அருள்செல்வம், தலைஞாயிறு ஒன்றியக் கழகச் செயலாளர் மகா.குமார், நாகூர் நகர செயலாளர் எம்.ஆர்.செந்தில்குமார், மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் ஆர்.ஏ.டி.அண்ணாதுரை மற்றும் கழகத்தினர் உள்ளனர்.